முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஆனி மாதம் 26 திகதி முதல்

சுபகிருது வருடம் ஆடி மாதம் 01 திகதி வரை

(10.07.2022 ஞாயிறு முதல் 17.07.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கருணை வடிவான குருவே
காக்கும் சக்தியாக மக்களுக்கு
முருகப் பெருமான் சூட்சுமமாக
முழுமை கண்ட அரங்கஞானியே
2. ஞானியே உன்வழி மக்கள்
நம்பகம் பெற தேறுவரெனக்கூறி
ஞானியர் உன் வேண்டலுக்கிணங்கி
நாட்டிடுவேன் அகத்திய மகரிஷி யானும்
3. யானும் இந்தியா தமிழகத்தில்
இனிதே சுபகிருது மிதுனதிங்கள் இருபானாற் திகதிமேல்
ஞானமுள நள்ளிதிங்கள் முதல் திகதிவரை
நடக்கும் வாரநிகழ்வாக வருங்கால பலன்குறித்த
4. குறித்தநல் ஆசிதனை உரைப்பேன்
குறையிலா வேலவன் சக்திமிகு
தெரிவிப்பேன் தமிழகம் தானும்
தணிகாசலன் வழிபாட்டை பெருக்கி
5. பெருக்கி ஜீவதயவுபட செயல்கள்
பிசகின்றி மக்கள்கள் கடைபிடித்திட
வருத்தமுள பேரிடர் கஷ்டம்
வருமுலகில் அனுகா அமைதிகாண்கும்
6. காண்கவே ஆளுமை சக்திகளும்
கண்டுரைப்பேன் பேதம் கருதா
ஆன்மீக ஞானவழி ஏற்று
ஆறுமுகனை வணங்கிச் செயல்பட
7. செயல்பட நிர்வாகம் சிறந்து
சேவைகளாக எங்கும் தலைமை
தயவாகப் பெருகி இனிதே
தமிழகம் இந்தியா தனித்துவம் காணும்
8. காணுமே வளர்ச்சிப் பணிகளாக
கட்டாயம் யாவும் சிறந்து
ஞானபூமிக்கு பொருளாதாரவழி
நல்ல தேற்றமும் நம்பகமும் கூடும்

9. கூடாத கலகங்கள் தானும்
குறிப்பாக கலகத்தை முடக்கி
ஈடேற்றும் தருமவழி வருபவர்க்கும்
எண்ணம் ஞான வழிவந்தவர்க்கும் ஆக

10. ஆகவே மாற்றம் காணும்
அறத்துடனான ஆன்மீக மாற்றம்
வகைபட இந்திய தமிழக ஆளுமையை
வலுப்படுத்தும் வளர்ச்சியூட்டும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் ஆனி மாதம் **26**ம் நாள் **10.07.2022** ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் முதல் நாள் **17.07.2022** ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

கருணையே வடிவான ஞானகுருவே உலகமக்களை காக்கும் மகா சக்தியாக முருகப்பெருமானின் சூட்சுமமாக அவதரித்து ஞானத்தில் முழுமை வெற்றி கண்டிட்ட ஆறுமுக அரங்க மகா ஞானியே அற்புதமான ஞானநெறி வகுத்திட்ட மகாகுருவே உமது கொள்கைகளை மக்கள் ஏற்று உம்மை பின்தொடர்ந்து உமது வழி நடந்திட உறுதியாக அவர்கள் எல்லாம் ஜென்மத்தை கடைத்தேற்றிக் கொள்வார்கள் எனக் கூறியே மகாஞானி அரங்கனே உமது வேண்டுகோளிற்கு இணங்கியே அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் ஆனி மாதம் **26**ம் நாள் **10.07.2022** ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் முதல் நாள் **17.07.2022** ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

எல்லா வளங்களையும், நலங்களையும் யோகமும் ஞானமும் தந்தருளும் ஞானபண்டிதனார் முருகப்பெருமானின் சக்தியை பெற்றிட்ட தமிழகம் முருகப்பெருமானை வழிபடு தெய்வமாக ஏற்றுக் கொண்டு முருகப்பெருமான் வழிபாடுகளை அதிகமாக செய்வதுடன் ஜீவதயவுடன் செயல்களை மக்கள் செய்து வரவர மக்களை வருத்தும் இயற்கை பேரிடர்கள் மக்களை அனுகாது விலகிடும்.

மக்கள் மட்டுமன்றி ஆட்சியர்களும், அதிகாரிகளும் கடவுள் நம்பிக்கை கொண்டு மக்களை காக்க வேண்டி முருகப்பெருமானை வழிபாடுகள் செய்து தரும ஞான நெறிகளை, ஆன்மீக ஞானவழிகளை ஏற்று செயல்பட நிர்வாகம் சிறந்து விளங்கும் தொண்டுள்ளம் மிகுந்து மக்களிடம் தயவு பெருகி இந்தியா தமிழகம் தனித்துவமான நிலையை அடையும்.

நாடெங்கும் வளர்ச்சி பணிகள் அதிகமாகி எல்லாம் சிறந்து விளங்கி ஞானபூமியாகிய இந்தியா தமிழகத்திற்கு பொருளாதாரம் பல வழிகளில் பெருகி நல்ல முன்னேற்றம் அடைந்து மக்களுக்கு அரசின் மீது நம்பிக்கை அதிகமாகும். நாட்டில் நடக்கின்ற குழப்பங்களும் கலகங்களும் முடங்கிடும் தரும வழி வருபவர்களுக்கும் ஞானவழி வருபவர்க்கும் பெரும் மாற்றங்கள் உண்டாகும்.

நாடெங்கும் தருமத்தின் மூலமாக தரும ஆன்மீக மாற்றம் உண்டாகி இந்தியா தமிழக ஆளுமைகளும் வலுப்பெறும் பெரும் வளர்ச்சியையும் நாடு அடைந்து சிறக்கும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–